தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 24-11-2015
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பெருகிவரும் மக்கள் தொகையின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய மண்வளத்தைப் பாதுகாப்பது அவசியம் – பதிவாளர் பேச்சு

தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியல் துறையில் மண்ணிற்கான பன்னாட்டு ஆண்டு 2015 யை ஒட்டி "மண் வளமும் மேலாண்மையும்" என்ற தலைப்பில் உழவர் கருத்தரங்கு 20-11-2015 அன்று நடைபெற்றது. இந்த கருத்தருங்கில் கோவை, திருப்பூர், ஈரோடு, திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களைச் சார்ந்த 117 உழவர் பெருமக்கள் பங்கேற்றனர்.

இக்கருத்தரங்கில் இயற்கை வள மேலாண்மை இயக்குனரகத்தின் தனி அலுவலர் முனைவர் வே.பெ. துரைசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றி விழாவினை துவங்கிவைத்தார். அவர் தம் வரவேற்புரையில் மனித வாழ்வில் மண்ணின் முக்கியத்துவத்தை மனித உடலின் செயல்பாடுகளுடன் ஒப்பிட்டு கருத்துக்களை எடுத்துரைத்தார். மேலும் மண்வள பாதிப்பானது மண் மற்றும் பயிர் நலனை பாதிப்பதோடு மனித நலனையும் குன்றச் செய்கிறது என்றார். மணணின் பல்வேறு நிறங்களை மனிதனின் நிறவேறுபாட்டுடன் ஒப்பிட்டு அதன் மாறுபட்ட பண்புகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர், முனைவர், சி.ஆர் அனந்தகுமார் அவர்கள், பெருகிவரும் மக்கள் தொகையின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய மண்வளத்தை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று விளக்கிக் கூறினார். மண் பரிசோதனை செய்து சமச்சீர் உரமிடல் பற்றிக் கூறும்பொழுது, ஒருங்கிணைந்த உரநிர்வாகம் செய்வதில் செயற்கை மற்றும் இயற்கை உரங்களின் பங்களிப்பை எடுத்துரைத்தார். மேலும் மண்வளப் பாதுகாப்பில் தகுந்த பயிர் சுழற்சி மற்றும் உயிர் உரங்களின் முக்கியத்துவத்தை விளக்கினார். மனிதனின் செயல்பாடுகளால் ஏற்படும் நில மற்றும் நீர்

மாசுபடுதலைக் குறித்து விவசாயிகள் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தேநீர் இடைவெளிக்குப் பிறகு, மண் வளம் காத்து பயிர் மகசூல் பெருக்குவது பற்றி மண்ணியல் துறையின் பேராசிரியர்கள் பல்வேறுபட்ட தலைப்புகளில் விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார்கள்.

இக்கருத்தரங்கில் முனைவார். ப. மலர்விழி பேராசிரியர் அவர்கள் மண்ணே மனிதனின் உயிர்நாடி என்ற தலைப்பில் மண்ணையும் மண் வளத்தையும் நாம் ஏன் காக்க வேண்டும் என்று விரிவுரை ஆற்றினார். அதில் மண்வளம் காப்பது பற்றிய வேளாண் உத்திகளை விளக்கமாக எடுத்துரைத்து சமச்சீர் உரமிட்டு மகசூலைப் பெருக்குவது பற்றி விளக்கமளித்தார்.

முனைவர் இரா.சாந்தி பேராசிரியர் அவர்கள் மண் ஆய்வும் உரப்பரிந்துரைகளும் என்ற தலைப்பில் மண்ணை பரிசோதித்து உரமிட வேண்டிய காரணத்தையும் மற்றும் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற அணுகு முறைகளையும் எடுத்துரைத்தார். பேரூட்ட உரமேலாண்மையில் மண் ஆய்வு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது பற்றியும். மண் பரிசோதனை செய்து உரப்பரிந்துரை செய்வது எப்படி என்பது பற்றியும் விரிவாகக் கூறினார், மேலும் பயிர் மகசூல் இலக்கிற்கேற்ப உரமிடுவது எவ்வாறு பற்றியும், இத்துரையில் இதைப்பற்றி செய்யப்பட்ட ஆய்வு முடிவுகள், விளக்கத் திடல்கள், பயிற்சி முகாம்கள் ஆகியனபற்றி தெள்ளத் தெளிவாக விவசாய பெருமக்களுக்கு எடுத்துரைத்தார்.

முனைவார் ப. ஸ்டாலின் பேராசிரியர் அவர்கள் நுண்ணூட்டச் சத்து மேலாண்மை பற்றி தனது உரையில் பயிர்களின் ஊட்டச்சத்தில் நுண்ணூட்டங்களின் பங்கு என்ன, பயிர் நுண்ணூட்டச்சத்துக்களின் குறைபாடு எவ்வாறு இருக்கும் அவற்றை மேலாண்மை செய்வது எப்படி என்பதை பற்றி விரிவுரையாற்றினார். மண்ணின் இடர்பாடுகளும் மேலாண்மையும் பற்றி பேராசிரியர் சி. சித்தேஸ்வரி அவர்கள் பேசுகையில் மண்ணில் ஏற்படும் பலவிதமான பௌதீக மற்றும் வேதியியல் இடர்பாடுகள் பற்றியும் அவற்றால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றியும் விளக்கிக் கூறினார். இந்த இடர் பாடுகளை சீர் செய்யும் தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தார்.

இறுதியாக, உழவர் பெருமக்கள் மண்ணியல் துறை நிபுணர்களுடன் பல்வேறு வினாக்களை கேட்டு தங்களது சந்தேகங்களையும் மற்ற விளக்கங்களையும் தெரிந்து கொண்டார்கள். மண்ணியல் மற்றும் வேளாண் வேதியல் துறை பேரசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வெ.வே. கிருஷ்ணமுர்த்தி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


2015
சர்வதேச மண் வள ஆண்டு
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்
மண் வளமும் மேலாண்மையு
உழவர் கருத்தரங்கு
இடம் : மண்ணியல் துறை
நாள் : 20.11.2

